இலக்கம் ... Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கடர்10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 11 வியாழக்கிழமை (27-07-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்244

# காங்கேசன் வரும் கப்பல்களுக்கு செஞ்சிலுவை பாதுகாப்புத் தராது!

## சர்வதேசக் குழு அரசுக்கு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 27

காங்கேசன்துறை துறைமுகம் இராணுவக் கட்டுப்பாட்டில் இருப்பதால் அந்தத் துறைமுகத்துக்கு பொருள்களை ஏற்றிவரும் கப்பல்களுக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்பை வழங்க முடியாது.

— இவ்வாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் அரசுக்கு அறிவித்திருப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

எனினும் யாழ். குடாநாட்டிற்கான பொருள்களை ஏற்றிக் கொண்டு பருத்தித்துறை துறைமுகத்துக்கு வரும் கப்பல்களுக்கு தமது குழு தொடர்ந்து பாதுகாப்பு வழங்கும் என்றும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு தெரிவித்திருக்கிறது.

யாழ். குடாநாட்டிற்கான பொருள்களை ஏற்றிக் கொண்டு, செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்புடன் பருத்தித் துறைதுறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருந்த 'லங்கா முடித'' கப்பலை கடற்படையினர் காங்கேசன் துறை துறைமுகத்துக்கு வெளியே மறித்து வைத்து, அதிலிருந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். நகரில் நேற்றுப் பகல்

## செஞ்சிலுவை பாதுகாப்பு வலயத்துக்கு அருகில் ஷெல் விழுந்து வெடித்தது

யாழ்ப்பாணம் ஜூலை. 27

யாழ். நகரில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பு வலய எல்லைக்கு அருகிலும் நேற்று ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்றுப்பிற்பகல் 1-30மணியளவில் மண்டைதீவு இராணுவத்தினரால் ஏவி விடப்பட்ட ஷெல்களில் ஒன்று யாழ் ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதிச் சந்திக்குச் சமீபமாக — ஆஸ்பத்திரி வீதியில் — பாதுகாப்பு வலய எல்லைக்கு அருகேயுள்ள பலசரக்கு வியாபார நிலைய களஞ்சியம் ஒன்றின் மீது வீழ்ந்து வெடித்தது. இதனால் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இதே வேளை நேற்று நண்பகல் 12-45 மணியளவில் மண்டை தீவுப் பகுதி இராணுவத்தினர் ஏவியஷெல்களில் ஒன்று வண்ணார்பண்ணை தபாலகத்துக்குச் சமீபமாகவுள்ள வீடொன்றில் விழுந்து வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

வீட்டு மதிலைத் துளைத்துக் கொண்டு வந்து வீழ்ந்து புதைத்துக் கொண்டிருந்த அந்தஷெல் அதிர்ஷ்டவசமாக வெடிக்கவில்லை.

அந்த ஷெல் வெடித்திருந்தால் வீட்டில் இருந்தவர்களுக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-4)

## மண்டைதீவு ஷெல்லுக்கு அரியாலை இளைஞர் பலி

யாழ்ப்பாணம், ஜூலை 27

மண்டைதீவில் நிலை கொண்டுள்ள படையினர் நேற்று நண்பகல் நடத்திய ஷெல் வீச்சுக்கு இலக்காகி அரியாலை வாசி ஒருவர் உயிரிழந்தார்.

கோட்டைப் பகுதியில் விழுந்த ஷெல்லுக்கு இலக்காகி படுகாயமடைந்த இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, சிலமணி நேரங்களின் பின் அங்கு மரணமானார்.

அரியாலை பூம்புகாரை சேர்ந்த இராசையா கண்ணன் (18 வயது) என்ற இளைஞரே ஷெல் வீச்சில் பலியானவர் ஆவார். [ஓ-15]

## ஜி.சி.ஈ உயர்தர பரீட்சை நாடுமுழுவதும் நடக்கும்

### மாணவருக்கு அனுமதி அட்டைகள்

கொழும்பு, ஜூலை 72

ஜி.சி.ஈ (உயர்தர) பரீட்சை வடக்கு கிழக்கு உட்பட நாடு முழுவதிலும் எதிர்வரும் திங்கட்கிழமை 31 ஆம் திகதி ஆரம்பமாகும்

வடக்கு கிழக்கு பகுதிகளில் இந்தப் பரீட்சையை நடத்துவது பற்றி கல்வி அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும் நேற்று முன்தினம் ஆராய்ந்தன.

இதைத் தொடர்ந்து வடக்கு கிழக்கு உட்பட நாடு முழுவதும் பரீட்சையை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டதாகபரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ரசல் குணரட்ண தெரிவித்திருக்கிறார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

காரில் சுவரொட்டியுடன்

## ஐ. தே. கட்சி எம். பியும் அவரின் சகா மூவரும் கைது

அரசுக்கு எதிரான சுவரொட்டிகளுடன் காரில் சென்ற ஐ.தே.கட்சி எம்.பி. ஒருவரும் அவரது சகாக்கள் மூவரும் கடந்த செவ்வாயன்று கைது செய்யப்பட்டதாக பொலீஸ் வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன

வாகனங்களைச் சோதனையிடும் நிலையம் ஒன்றில் வைத்தே இவர்கள் நால்வரும் பொலீஸாரிடம் சிக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

எம்.பியான தினேஷ் தொடங்கொட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய மூவரும் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

வடக்கே தடை செய்யப்பட்ட பொருள்:

## லஞ்சம் வாங்கிய ராணுவ உயர் அதிகாரி கைது!

தடைசெய்யப்பட்ட பொருள்களை வடக்கே எடுத்துச் செல்ல உதவினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஸ்ரீலங்கா இராணுவ உயர் அதிகாரி ஒருவரை பொலீஸார் நேற்றுக் கைது செய்தனர்.

அந்த அதிகாரி வியாபாரி ஒருவரிடம் லஞ்சம் வாங்கிக் கொண்டு, தடைசெய்யப்பட்ட பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதி வழங்கினார் என்று பொலீஸார் கூறுகின்றனர்.

வியாபாரியிடம் இருந்து பிரஸ்தாப அதிகாரி தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் வீடியோ நாடாக்களை லஞ்சமாகப் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவருடன் வியாபாரியும் மோசடி செய்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# இலங்கையை மாநிலங்களின் ஒன்றியமாக்க அரசாங்கத்தின் தீர்வுத் திட்டத்தில் யோசனை

## வடக்கு- கிழக்கு இணைந்து ஒரு மாநிலம்

கொழும்பு, ஜூலை 27

★ இலங்கையை மாநிலங்களின் ஒன்றியமாக மாற்றும் விதத்தில் அரசமைப்பை மறுசீரமைத்தல்.

★ வடக்கு - கிழக்கு இணைந்த மாநிலம் உட்பட எட்டு மாநிலங்கள் இந்த ஒன்றியத்தில் அங்கம்வகிக்கும்.

★ மாநிலம் ஒவ்வொன்றுக்கும் சட்டமாக்கும் அதிகாரமும் நிறைவேற்று அதிகாரமும் இருக்கும்.

★ சட்டம் - ஒழுங்கு, வரி விதிப்பு, கல்வி, அபிவிருத்தி, வீடமைப்பு ஆகியன உட்பட பல அதிகாரங்கள் மாநிலங்களுக்கு வழங்கப்படும்.

★ பாதுகாப்பு, வெளிவிவகாரம், நிதி (கரன்ஸி), தேர்தல் உட்பட மற்றும் சில அதிகாரங்களை மத்திய அரசாங்கமே வைத்திருக்கும்.

— இனப்பிரச்சினைக்கான [illegible] யோசனையில் மேற்கண்டவை குறிப்பிடத்தக்க அம்சங்களாக அமைந்திருப்பதாக பி. பி. ஸி நேற்றிரவு அறிவித்தது.

பிரஸ்தாப தீர்வு யோசனை உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை ஆயினும்— அதன் பிரதிகளை சில பத்திரிகையாளர்கள் எப்படியோ பெற்றுக்கொண்டு விட்டதாகவும் — அறிவிக்கப்பட்டது.

பி பி ஸியின் கொழும்புச் செய்தியாளர்களில் ஒருவரான ராஸிக்கா இப்பான் அரசின் தீர்வு யோசனைப் பிரதியை தாம் பார்த்ததாகக் கூறியே முன்கண்ட அம்சங்களை விவரித்தார்.

இதேவேளை உத்தேச தீர்வு யோசனை சம்பந்தமாக பி பி.

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்க

## ஆண்டுப் பொதுக் கூட்டம்

திட்டமிட்டவாறு 31-07-95 அன்று நடைபெறமாட்டாது.

(37750) செயலாளர்

## கண்ணீர் அஞ்சலி

*நிர்மாணத் திணைக்கள முன்னாள்*
*யாழ்ப்பாண நிறைவேற்றுப் பொறியியலாளர்*

**அமரர் செல்லையா பரஞ்சோதி**
(பொறியியலாளர்)
அவர்கள்

காலமாகிவிட்டதை அறிந்து மிக்க துயர் அடைகின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

— நிர்மாண திணைக்கள ஊழியர்.

கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம் [37748]

## அறிவித்தல்

இன்று 27-07-95 வியாழக்கிழமை ஆடி அமாவாசை வர்த்தக விடுமுறை தினமாக இருப்பதால், அண்மையில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களின் வசதிகள் கருதி வருகிற சனி, ஞாயிற்றுக்கிழமை வணிகநிலையங்கள் திறந்திருக்கலாம். ஊழியர்கள் தாமாக விரும்பி வேலைக்கு வரும் பட்சத்தில் மேலதிக வேதனம் வழங்கப்படல் வேண்டும்.

யாழ் மாவட்ட
**வணிகர் கழகங்களின் இணையம்**

(சி/1954)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
**பரமலிங்கம் மணிவண்ணன்**
(பாபு)
(யாழ். பரியோவான் கல்லூரி ஆண்டு 95 உயர்தர வகுப்பு மாணவன்)

மலர்வு: 05-05-1976
உதிர்வு: 27-07-1993
திதி: 05-08-1995

''ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ இம் மாநிலத்தே'' என்ற கூற்று பொய்யாகாதோ என்று மனம் ஏங்குதடா, பாபுக்கிளி ஆற்றுவாரின்றி வருந்தும் அம்மாவையும், அப்பாவையும் தேற்றுவாரின்றி தேம்பும் தங்கையையும், அக்காவையும் மறந்து நீ சென்ற தெங்கே மல்லிகை! போல் உன் வாழ்வு சடுதியில் முடிந்தாலும், மறையாது நீபரப்பிய இசைமணம் எம்மனதில்.
மணிவண்ணா! ஓடி நீ வாராயோ எம் கண்ணா!

உன் பிரிவால் துயருறும்:
அன்பு அம்மா, அப்பா,
அக்கா, தங்கை அம்மம்மா,
பெரியப்பாமார், பெரியம்மாமார்,
சித்தப்பாமார், அன்ரிமார்,
சகோதர, சகோதரிகள்,
ஆசிரியர்கள், நண்பர்கள்.

செ. க. பரமலிங்கம்,
(பிரதம ஜெயிலர்)
36/16 காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (37746)

# றோட்டறி பிரதிநிதிகளுக்கு அகில இலங்கைப் பதவிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 27
1994 - 1995 ஆம் ஆண்டின் அகில இலங்கையில் சிறந்த றோட்டறிக் கழகமாகத் தெரிவு செய்யப்பட்ட யாழ். றோட்டறிக் கழகத்தின் சேவையைக் கௌரவிக்குமுகமாக இலங்கை றோட்டறி மாவட்டத்தின் ஆளுநர் முக்கிய மூன்று பதவிகளை யாழ் றோட்டறிக் கழகப் பிரதிநிதிகளுக்கு வழங்கியுள்ளார்.

1994-1995 ஆம் ஆண்டின் யாழ். றோட்டறிக் கழகத் தலைவர் றோட்டேறியன் ஈ. சரவணபவன் றோட்டறி ஆளுநரின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, பரந்தன், மட்டக்களப்பு பிரதேச அணிப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்த ஆண்டின் செயலாளரும் நடப்பு வருட பதில் தலைவருமான றோட்டேறியன் தி. திருநந்தகுமார் மேற்படி பிரதேச றோட்டறக்ட் இணைத் தலைவராகவும், றோட்டேறியன் டாக்டர் ஸ்ரீரட்ணகுமார் இன்ரறக்ட் இணைத் தலைவராகவும் ஆளுநரால் நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

## டிப்ளோமா செயலமர்வுகள்

யாழ். இந்துக் கல்லூரி நிலைய கல்வி டிப்ளோமா முதலாம், இரண்டாம் வருட மாணவர்களுக்கான செயலமர்வுகள் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறுமென சிரேஷ்ட விரிவுரையாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## ரஸெப் வகுப்புக்கள்

ரஸெப் ஆங்கில வகுப்புகள் இவ்வாரம் முதல் வழமை போல் நடைபெறும் என்று மாநில இணைப்பாளர் திரு. சோ. பத்மநாதன் அறிவிக்கிறார். (ஒ)

## வெளியீட்டு விழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27
நாளை வெள்ளிக்கிழமை ஸ்ரீதர் திரையரங்கில் நடைபெற இருந்த ''உறங்காத கண்மணிகள்'' வீடியோ திரைப்பட வெளியீட்டு விழா பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (ஒ)

## அரபாத்துக்கு பெண்குழந்தை

பாரிஸ், ஜூலை. 27
பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத்துக்கு பெண்குழந்தை கிடைத்துள்ளது. பாரிஸில் அவரது மனைவி நேற்று முன்தினம் குழந்தையை பிரசவித்தார்.

தமக்கு பெண் குழந்தை கிடைத்ததையிட்டு 65 வயதான யசீர் அரபாத் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். (ஐ)

## பொன்னாலை உற்சவம் நடைபெறாது

பொன்னாலை ஸ்ரீவரதராஜப்பெருமான் ஆலய வருடாந்த உற்சவம் இம்முறை நடைபெறமாட்டாது என அறிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக உற்சவம் நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் முதலாம் திகதி உற்சவம் ஆரம்பமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## ஆலயங்களில்

சாவகச்சேரி, ஜூலை 27
மீசாலை கிழக்கு பன்றிக்கேணி கந்தசுவாமி தேவஸ்தான அலங்கார உற்சவம் இன்று வியாழன் முதல் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும். தேர்த் திருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதியும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (எ-31)

## நிர்வாகசேவை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27
கடந்த மார்ச் 10 ஆம் திகதி முதல் அரச காணிகளின் நிர்வாகத்தை தமிழீழ நிர்வாக சேவை பொறுப்பேற்றுள்ளதால் அதன் உரிமையாளர்கள் அவற்றை விற்கவோ, வாங்கவோ கூடாது எனவும் அவ்வாறான காணிகளை எவரும் கொள்வனவு செய்யக்கூடாதெனவும் தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் அறியத்தருகின்றார். (ஒ)

**சிவாகி கல்வி நிலையம்**
சாவகச்சேரி.

**96, 97**
பிரிவுகளுக்கான சகல வகுப்புகளும் வழமை போல சனி, ஞாயிறு நடைபெறும்

நிர்வாகி
(37742)

# புலிகளைத் தடை செய்யும் வழி பற்றி சட்டமா அதிபர்

கொழும்பு, ஜூலை 27
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அவசரகால சட்டத்தின் கீழ் தடைசெய்யலாம் அல்லது சாதாரண பெரும்பான்மையால் நிறைவேற்றப்படும் நாடாளுமன்ற சட்டத்தினால் தடைசெய்யலாம்.

சட்டமா அதிபர் இவ்வாறு அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை உடனடியாகத் தடை செய்ய அரசாங்கம் விரும்பினால், அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் அதைச் செய்ய முடியும். நாடாளுமன்றத்தில் விசேட சட்டம் ஒன்றை நிறைவேற்றுவதானால் அதற்குக் காலம் பிடிக்கும் எனவும் சட்டமா அதிபர் அரசுக்கு அனுப்பிய அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ஒ-ஐ)

### ஷெல் தாக்குதலை அடுத்து

# நள்ளிரவில் கோயில்களுக்கு சென்று தங்கிய மக்கள்!

படை முகாம்களில் இருந்து ஷெல் தாக்குதல்கள் ஆரம்பமானதை அடுத்து —

கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவுக்குமுன்பாக வடலியடைப்பு, பனிப்புலம், பண்ணாகம், சுழிபுரம் வடக்குப் பகுதி மக்கள் படுத்த படுக்கைகளுடன் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்றனர்.

அனேகமானோர் வழக்கம்பரை அம்மன் கோயிலிலும் பண்ணாகம் விசாவத்தனை முருகன் கோயிலிலும் இரவு தங்கி இருந்துவிட்டு காலையில் வீடுகளுக்குத் திரும்பினர்.

பத்துக்கும் மேற்பட்ட ஷெல்கள் பண்டத்தரிப்பு, வடலியடைப்பு, சில்லாலை ஆகிய இடங்களில் விழுந்து வெடித்தன. தெய்வாதீனமாக உயிர்ச்சேதம் ஏற்படவில்லை.

மக்களில் சிலர் பீதியுடன் வீட்டுப் பொருள்களை அப்புறப்படுத்தியதையும் காண முடிந்தது. [ஒ-28]

### சென் பீற்றேஸ் தேவாலய தாக்குதல்

# யாழ். செயலக பதிவின்படி உயிரிழந்தோர் 117

வலிகாமம்தெற்கு, ஜூலை 27
யாழ்ப்பாணம் செயலகத்துக்கு இதுவரை கிடைத்த பதிவுகளின் படிநவாலி சென் பீற்றேஸ் தேவாலய தாக்குதலின் போது உயிரிழந்தோரின் எண்ணிக்கை 117.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க.பொன்னம்பலம் தெரிவித்தார்.

''முன்னேறிப் பாய்தல்'' ராணுவ நடவடிக்கை காரணமாக, மாவட்ட ரீதியாக உயிரிழந்தோர் 225, உடல் ஊனமுற்றோர் 930, நவாலிதேவாலய தாக்குதலில் ஊனமுற்றோர் 170 பேர் எனவும் அவர் கூறினார்.

''முன்னேறிப் பாய்தல்'', இராணுவ நடவடிக்கையின் பின்னர் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிட்ட அரசாங்க அதிபர் பிரதேச செயலக ஊழியர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடல் நடத்திய போதே இதனைத் தெரிவித்தார். (இ-152)

## ஜி.சீ.ஈ. பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 27
ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை தொடர்பான அறிவுறுத்தற் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் ஸ்தான சீ.சீ. தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் நடைபெறும் என்று வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் சகல பரீட்சைக் குழுவினருக்கும் தெரியப்படுத்தி உள்ளார். (ஒ)

### தீர்வுத் திட்டம் மூலம் அரசு

# மக்களிடமிருந்து புலிகளை தனிமைப்படுத்த முயற்சி

கொழும்பு, ஜூலை 27
'அரசியல் தீர்வு யோசனைகளை முன் வைப்பதன் மூலம் விடுதலைப் புலிகளை மக்களிடம் இருந்து தனிமைப்படுத்த அரசு முயற்சிக்கிறது' என்று தமிழ் அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

இலங்கையின் ஒற்றையாட்சித் தன்மையை ஏற்றுக்கொள்ளுகின்ற மிதவாத தமிழ் மக்களுக்கு அரசியல் சலுகைகளை முன் வைப்பதன் மூலம் விடுதலைப் புலிகளை தமிழ் மக்களிடம் இருந்து தனிமைப்படுத்த அரசு முயல்கிறது என்றும் அது சாத்தியமானதாக அமையாது என்றும் அந்த தமிழ் அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசும், படையினரும் கூறுவதை ஏற்கும் நிலையில் மக்கள் இல்லை

## "திவயின" பத்திரிகை தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 27

அரசாங்கமும், பாதுகாப்புப்படையினரும் வெளியிடும் தகவல்களை ஏற்றுக்கொள்ளும் நிலையில் நாட்டு மக்கள் இல்லை.

''திவயின'' பத்திரிகைஇவ்வாறு தெரிவித்துள்ளது.

அந்தப் பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தாமல் ஒரு அங்குலம் கூடப் பின்வாங்கமாட்டோம் என அரசு முன்னர் தெரிவித்தது.

ஆனால் இராணுவம் பலாலிக்குத் திரும்பிவிட்டதாக பாதுகாப்புப் படையினரின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

''முன்னேறிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கை தொடர்பாக இவ்வாறு பாதுகாப்புப்படையினரும், அரசாங்கமும் வெளியிடும் தகவல்கள் ஒன்றுக்கொன்று முரணானவையாக உள்ளன.

இதனால் உண்மை நிலை என்ன என்று தெரியாது உள்ள மக்கள், அதைப்பற்றி சரியான தகவல்களைப் பெற ஆவலாக உள்ளனர்.

★ 'முன்னேறிப் பாய்சல்' இராணுவ நடவடிக்கையில், முன்னணியில் சென்ற படை தற்போது எங்கே நிலை கொண்டுள்ளது?

★ முன்னர் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களுக்கும், புதிதாக கைப்பற்றப்பட்ட பிரதேசங்களுக்கும் இடையேயான இடைத் தூரம் எவ்வளவு?

★ இராணுவத்தினரால் புதிதாக கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் பிரதேசத்தின் உண்மையான பரப்பளவு எவ்வளவு?

★ இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் சண்டிலிப்பாய் தற்போதும் இராணுவத்தின் வசம் உள்ளதா? இல்லையெனில் அங்கு யார் இருக்கிறார்கள்?

ஆகிய கேள்விகள் சிங்கள மக்கள் மத்தியில் பரவலாக எழுந்துள்ளன.

(எ-10)

# கதிர்காமம் செல்ல தமிழர்கள் அச்சம்

## இன்றுகந்தன் ஆலயம்கொடியேற்றம்

கொழும்பு, ஜூலை 27

காலியில் அண்மையில் தமிழர்கள் மீதும் தமிழர்களின் சொத்துக்கள் மீதும் வன்முறைகள் கட்டவிழ்த்த விடப்பட்டதை தொடர்ந்து இம்முறை கதிர்காமம் கந்தன் ஆலயத்துக்குச் செல்ல தமிழர்கள் அஞ்சுகின்றனர்.

காலிப்பகுதியைச் சேர்ந்த பௌத்தபிக்கு ஒருவர் பொலன்னறுவையில் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்துகாலியில் குழப்பம் ஏற்பட்டது தெரிந்ததே.

வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற சிலவாரங்கள் கழிந்து விட்டபோதிலும் இன்னமும் பஸ்களிலும் மற்றும் வாகனங்களிலும் செல்லும் தமிழர்கள் பொலீஸாரின் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்றும்—

தாம் வீண் தொந்தரவுக்கு உள்ளாகலாம் என்று ஐந்து தனியார் மினிபஸ் சாரதிகள் தமிழர்களை ஏற்றிச் செல்ல மறுக்கின்றனர் என்றும்— தெரிவிக்கப்படுகிறது.

சரித்திரப் பிரசித்திபெற்ற கதிர்காமம் கந்தன் ஆலயம் இன்று கொடியேறுவது குறிப்பிடத்தக்கது. [இ-154]


1995 / 96

## காலபோக விதை நெல்

1995/96 காலபோகத்திற்குத் தேவையான தூய தரம் உறுதிப்படுத்தப்பட்ட விதை நெல் இனங்களான,

**H 4**
**BG 500**
**AT 303**
**AT 402**

ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள பின்வரும் இடங்களை நாடுங்கள்

பசுமை வேளாண் சேவை

| | | |
|---|---|---|
| சங்கானை | சண்டிலிப்பாய் | உடுவில் |
| நல்லூர் | கொடிகாமம் | கைதடி |
| கரவெட்டி | பளை | சாவகச்சேரி |

மத்திய வேளாண், நலன் சேவைகள்,
விவசாயப் பகுதி,
த. பொ. மே. நிறுவனம்,
தமிழீழம்.

"பசுமைப் புரட்சி
தமிழீழத்தின் எழுச்சி"

[சி-1941]


## புலிகளின் குரல் வானொலியில்

27 — 07 — 1995
**வியாழன் இரவு**

★ 8-02 — சொல்லுங்கள் பார்க்கலாம்
★ 8-10 — நோய் தீர்க்கும் மூலிகைகள்
★ 8-20 — உழைப்போம் உயர்வோம் - நிகழ்ச்சியில் ''நன்னீர் மீன் பயன்பாடு'' சித்திரம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — மொழியும் வாழ்வும்
★ 8-50 — எங்களின் தேசம்

28 — 07 — 1995
**வெள்ளி காலை**

★ 7-02—மாவீர வணக்கம்
★ 7-15 — மணியாரம்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-45 — தாயகப்பாடல்கள்

## தமிழீழ வானொலியில்

**வியாழன் மாலை**

★ 5-01 — சிந்தனைச்சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — மழலைகளுக்காக
★ 5-30 — இசையும் கதையும்
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 — பொன் விளையும் பூமி
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — கேள்வி - பதில்- விளையாட்டுத் தொடர்பானவை

## தேசிய பயிலுநர் பயிற்சிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 27

கடந்த 19 ஆம் திகதி முதல் ஆரம்பமாக விருந்த தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சிப் பரீட்சை — ஊரடங்கு காரணமாக ஒத்தி வைக்கப்பட்டு — எதிர்வரும் 31 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 4 ஆம் திகதிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது (ஐ-4)

## பல்கலைக்கழக விரிவுரைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பட்டப்பின் படிப்பு டிப்ளோமா (முழு நேரம்) மற்றும் ஏனைய பீடங்களுக்கான விரிவுரை செய்முறை வகுப்புகள் இம் மாதம் 31 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் வழமை போல் நடைபெறவுள்ளன.

பட்டப்பின்படிப்பு [பகுதி நேரம்], தொழிலாளர் கற்கை நெறி, புறநிலைப் படிப்புகள் அலகு ஆகிய நெறிகளுக்கான விரிவுரைகள் எதிர்வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதியும்— [illegible] துறைகளுக்கான விரிவுரைகள் ஓகஸ்ட் 7 ஆம் திகதியும் ஆரம்பமாக உள்ளன. [எ]

# கிழக்கில் பல முகாம்கள் புலிகளின்கட்டுப்பாட்டில்!

கொழும்பு, ஜூலை 27

கிழக்கு மாகாணத்தில் அரசுப் படைகளும், பொலீஸாரும் பல முகாம்களை கைவிட்டு வெளியேறியதை அடுத்து அந்த முகாம்கள் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்திருப்பதாக அரசு சார்பு ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்திருக்கிறது

மணலாறு, ஏறாவூர், களுவாஞ்சிக்குடி, வாழைச்சேனை, தளவாய், விஜேபுர, பேத்தாளை, வவுணதீவு போன்ற பகுதிகளில் இருந்த படை முகாம்களே புலிகளின் கட்டுப்பாட்டில் வந்திருப்பதாக அந்தப் பத்திரிகை தெரிவித்தது.

# முன்னேறிப் பாய்தல் மேலும் தொடராது!

## இராணுவப் பேச்சாளர் தகவல்

யாழ். குடாநாட்டில் கடந்த 9ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ''முன்னேறிப் பாய்தல்'' இராணுவ நடவடிக்கை முடிவடைந்து விட்டது அது மேலும் தொடரப்படமாட்டாது.

இவ்வாறு இராணுவப் பேச்சாளர் கேணல் ஹங்கபட ஆராச்சி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண நிலைமை குறித்து கருத்து தெரிவித்த அவர் புதிய நடவடிக்கைகள் குறித்து இன்னும் தீர்மானிக்கப் படவில்லை என்று கூறினார். (ஐ)

# காஷ்மீர் போராளிகளுடன் புலிகளுக்கு தொடர்பாம்!

சென்னை, ஜூலை 27

காஷ்மீர் தீவிரவாதிகள், ஆந்திரப்பிரதேச மக்கள் போர்க்குழு என்பனவற்றுடன் விடுதலைப் புலிகளும் இணைந்து நாட்டின் தேசிய நலன்களுக்கு எதிராகச் செயற்பட்டு வருகின்றனர் என்று இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் முஹிர்த்சிங் தெரிவித்துள்ளார்.

நாட்டை நிலை குலையச் செய்ய முயற்சி செய்வோரின் சதித்திட்டங்களுக்கு எதிராக சமயசார்பற்ற ஜனநாயக சக்திகள் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

சென்னையில் நடந்த கட்சியின் இரண்டாவது மாநில மாநாட்டில் உரையாற்றிய போதே முஹிர்த்சிங் இதனைத் தெரிவித்தார். (ஐ)

# சிங்கள மக்களிடையே மீண்டும் துவேச உணர்வு

கொழும்பு ஜூலை 27

கொழும்பில் சிங்கள மக்களிடையே மீண்டும் தமிழ் மக்களுக்கு எதிரான துவேச உணர்வு தலை தூக்கத் தொடங்கியுள்ளது.

அரசாங்க அலுவலகங்கள், பொது நிலையங்கள் முதலியவற்றுக்கு அலுவலாகச் செல்லும் தமிழ் மக்கள் மீது துவேசம் காட்டப்படுவதாகக் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகளிலிருந்து தெரிகிறது.

கொழும்பில் பொது நூல் நிலையம் ஒன்றில் அங்கத்துவம் பெற தமிழ் மாணவி ஒருவர் விண்ணப்பித்தார்.

ஆனால் லண்டன் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றக் கொழும்பில் கல்வி கற்கும் இந்த மாணவியின் விண்ணப்பத்தை நூல் நிலையப் பொறுப்பாளர் ஏற்க முடியாது என்று நிராகரித்து விட்டாராம். (க-154)

## நல்லூர் உற்சவத்தை ஒட்டி

# தமிழீழ வைப்பகத்தின் சிறப்புக் கருமபீடம்

எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவத்தை ஒட்டி ஆலயச் சூழலில் வைப்பகத்தின் சிறப்புக் கருமபீடம் ஒன்று அமைக்கப் படவுள்ளது

வாடிக்கையாளர்களின் நன்மை கருதியபல சிறப்பு அம்சங்கள் இந்த வைப்பகக் கிளையில் அறிமுகப்படுத்தப் படவுள்ளன (ஐ)

## ஆஸ்திரேலியாவில்

# ஸ்ரீலங்காவுக்கு எதிராக ஈழத்தமிழர் ஆர்ப்பாட்டம்

ஆஸ்திரேலியாவில் மெல்பேன் நகரில் இலங்கை அரசு ஏற்பாடு செய்த கருத்தரங்குக்கு எதிர்ப்பு தெரிவித்து ஈழத்தமிழர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்,

இலங்கை முதலீட்டுச் சபை ஏற்பாடு செய்த ''இலங்கை வர்த்தக முதலீட்டு வாய்ப்புக்கள்'' பற்றிய கருத்தரங்குக்கே எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் வரை இலங்கையில் ஆஸ்திரேலியா முதலீட்டாளர்கள் எவரும் முதலீடு செய்வதை எதிர்த்தும் —

ஈழத்தமிழர் மீதான பொருளாதாரத் தடையை நீக்கி தமிழ் மக்களுடன் நேரடி பொருளாதார வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்தக் கோரியும் — இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அத்தோடு தமிழ் மக்கள் சார்பில் இரு பிரதிநிதிகள் கருத்தரங்கில் கலந்து கொண்டு தமிழர் பிரச்சினையை ஆஸ்திரேலியா முதலீட்டாளர்களுக்கு எடுத்து விளக்கினர். [ஒ-3]

# ஆயிரம் தபால் பொதிகள் தேக்கம்

யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லப்படுவதற்காக ஆயிரம் தபால் பொதிகள் கொழும்பு தபால் திணைக்கள பரிவர்த்தனை நிலையத்தில் தேங்கிக் கிடக்கின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பொமனேரியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: [தேநீர்க்கடை, சட்டநாதர் சிவன்கோயில், முன்பாக. [37714]

ஒரு பெண் அல்சேசன் நாயும் (1½ வயது), ஒரு ஆண் அல்சேசன் நாயும் [6 மாதம்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: C. செல்வராஜா, ஏபில் ஆங்கிலக் கல்வி நிலையம், சுதுமலை அம்மன் கோயில், சுதுமலை. (37708)

ஆண் ஜேர்மன் செபேட் நாய்குட்டி [1½ மாதம்] விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ. குமாரசாமி, 17/1, றேயில்வே லேன், (கச்சேரி பஸ் நிலையத்துக்கு அருகில்) சுண்டிக்குளி. (37740)

### வாங்கப்படும்

காய்ந்த எலுமிச்சங் கோது [பூஞ்சணம் பிடிக்காதது] ஒரு கிலோ 50 ரூபாவுக்கு வாங்கப்படும். காய்வளவு இல்லாத [பச்சை] கருசலாங்கண்ணி தொகையாக வாங்கப்படும். காவேரி சீயாக்காய் பவுடர் தயாரிப்பாளர் இல. 15, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். ]37688]

### தேவை

ஆனைக்கோட்டை புற்கை தின்னிப்பிள்ளையார் கோவிலுக்கு உடனடியாக நடத்துனர் தேவை. தொண்டு மனப்பான்மை உடையவரும், சைவ சமய ஒழுங்குகள் தெரிந்தவரும், 45வயதிற்கு மேற்பட்டவரும், ஒன்றரை மைல் சுற்றாடலில் வசிப்பவரும் ஆகிய ஆண் தேவை. தலைவர், நிர்வாகசபையுடன் தொடர்பு கொள்ளவும். [37738]

ஆனைக்கோட்டை புற்கை தின்னிப் பிள்ளையாரின் பொருள்களைப் பாதுகாப்பதற்கு 7/8 அங்குலம் தடிப்புள்ள பலமான பலகையிலான ஏறத்தாழ 7அடி நீளம் 2½ அடி அகலம், 2½ அடி உயரம் கொண்ட பெட்டகம் உடனடியாகத் தேவை. தலைவருடன் தொடர்புகொள்க. (37739)

### விசேஷ அன்ரனா

ரூபவாஹினி, மட்றாஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு விசேஷ T V. அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல் T. V. செட், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டிக்காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம் சந்தி], யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-1687]

### தவறிவிட்டது

சங்கானை கிழக்கு ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த சுப்பன் சின்னத்தம்பியாகிய எனது தேசிய அடையாள அட்டை 24 - 07 - 1995 இல் யாழ். நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும் சி. சண்முகரத்தினம், மடத்தடி, மல்லவம் உடுவில். [37745]

## படையில் சேர பிக்குகள் விண்ணப்பம்

பலாங்கொடையைச் சேர்ந்த மூன்று பௌத்த பிக்குகள் இராணுவத்தில் சேர்ந்து போராட விண்ணப்பித்துள்ளனர். (க)

## கண்ணீர் அஞ்சலி

இணுவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியர்களாகக் கடமையாற்றி அமரத்துவம் எய்திய

திரு. சி. சிவபாதசுப்பிரமணியம்
(ஐயாக்கிளி)

திரு. செ. சண்முகநாதன்

ஆகியோருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆசிரியர் கழகம்,
இணுவில் மத்திய கல்லூரி.

[37743]

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 13 — 05 — 1928

உதிர்வு: 27 — 07 — 1994

### திருமதி சிவநாதன் ஞானபுஷ்பம் (குணமணி)

நாட்கள் பல ஓடினாலும் உங்கள் அன்பு நினைவுகள் என்றென்றும் எம் உள்ளங்களில் நிலைத்திருக்கும்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மகன், மருமகன்
பேரப்பிள்ளைகள்.

54/2, சந்தன மாதா கோயில் முன் ஒழுங்கை,
பாண்டியந்தாழ்வு. (37734)

## 12-ம் ஆண்டு நினைவஞ்சலி



ஜூலை 83 இல் வெலிக்கடை சிறைச்சாலையில் ஸ்ரீலங்கா அரசினால் படுகொலை செய்யப்பட்ட

### முத்துக்குமாரு ஸ்ரீகுமார் [ராசாண்ணை]

அன்னையின் மடியில்: 29 – 07 – 1946

அநியாயப் பிடியில்: 27 - 07 - 1983

உங்கள் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்;

மனைவி, பிள்ளைகள்,

ஸ்ரீகுமார் ஒழுங்கை,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய் [37721]

## பயிற்சிப் பத்திரிகையாளர்

பத்திரிகைத் துறையையே தொழிலாகக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் ஆசையும் உள்ளவர்களில் நீங்களும் ஒருவரா?

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர் தரப் பரீட்சையில், நான்கு பாடங்களில் சித்தி அடைந்த கல்வித் தகைமையும் உங்களுக்கு உண்டா?

அவ்வாறாயின் உதயன் ஆசிரியர் குழுவில் பத்திரிகையாளராகப் பயிற்சி பெற்று, பின்னர் பணிபுரிவதற்கு நாம் தேடுவோரில் நீங்களும் ஒருவராகும் வாய்ப்பு உங்களுக்கு உண்டு.

கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் தமிழிலும், ஆங்கிலத்திலும் ஆகக் குறைந்தது திறமைச் சித்தி பெற்றிருப்பது அவசியம்.

வயதெல்லை: 20 முதல் 24 வரை
பூரண விவரங்களுடன் 31 – 07 – 95 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

ஆளணி முகாமையாளர்,
உதயன் வெளியீட்டகம்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில் கடமைபாற்றும் மருந்தாளர்

திருமதி அரியசோதி முருகேசப்பிள்ளை
அவர்களின் சகோதரி

### செல்வி விமலா தம்பிநாயகம்

அவர்களின்

திடீர் மறைவையொட்டி கலங்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வவோடு, அன்னாரின் நினைவாக;

நீரோடக் கண்களிலே – உன்
நினைவை இருத்திவிட்டு
யாரோடும் பேசாது
யார் விருப்பும் கேளாது
தேரேறிப் பறந்தாயோ
தேவனின் தலைவாசல்
யார் தேற்றிக் கொள்வார்.
இத்துயரம் எம் நெஞ்சில்
ஈரீட்டி பாய்ந்தது போல்
குற்றுயிராய் போனோமே!
கொடிய நோயினிலே – நீ
கொடுமைப் படவில்லை.
கொடியவன் அனுப்பிய
குண்டு உன்மேல் பாய்ந்ததம்மா!
வேத புத்தகமும் வேறு கதைகளும்
படிப்பதற்கு தா என
பைங்கிளி நீ கேட்டாயே!
ஒரு கணத்தில் புயலாகி
இடியாகி எம்மை வீழ்த்தி
உறக்கத்தில் ஆழ்ந்தாயே! – எம்
இனிய சகோதரியே! விமலா!

வைத்திய அதிகாரிகள்;
உத்தியோகத்தர்கள்.

மார்புநோய் சிகிச்சைநிலையம்,
யாழ்ப்பாணம். (37742)

ஓம் விராட் விஸ்வப் பிரமணே நம

## 16 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

அராலி கிழக்கைச் சேர்ந்த

### திருமதி வள்ளியம்மை சின்னத்தம்பி ஆச்சாரியார்

13 – 07 1995 வியாழன் தச்சன் தோப்பில் சிவபதம் எய்திய எமது அன்புத்தாயாரின் 16ஆம் நாள் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (28 – 07 – 1995] வெள்ளிக்கிழமை இறுதிக் கிரியைகள் நடைபெற்ற இல்லத்தில் நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள் இக் கிரியைகளில் கலந்து அன்று நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மகன்மார் சி. கணபதிப்பிள்ளை
[ஆசிரியர் யா. இ. கல்லூரி],
சி. அமரசிங்கம்
(ஸ்தபதியார்),
சி. கணேசலிங்கம்.

தச்சன்தோப்பு,
நாவற்குழி. (37744)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## வினோதமான கேள்வி இது!

யாழ்ப்பாண நகரின் மீதும் ஷெல்கள் வந்து விழுகின்றனவா?

இப்படி ஒரு வினோதமான வினாவைக் கேட்டு ஆச்சரியம் வெளியிட்டவர் ஜனாதிபதி சந்திரிகாவே என்பது உதயன் வாசகர்களுக்குத் தெரிந்ததே.

தமது படைகள் கட்டுப்பாடானவை, பொதுமக்களுக்குத் துன்பம் விளைவிக்காமல், கொடுமை செய்யாமல் அரசியல் தலைமைப்பீடம் சொல்வது போல, ஒழுங்காகவே செயற்பட்டு வருபவை என்று ஜனாதிபதி கருதுகிறாரா?

''முன்னேறிப் பாய்தல்'' நடவடிக்கையின்போது வட்டுக்கோட்டைப் பகுதிக்கு வந்தவேளை, அங்கு அகப்பட்டுக்கொண்ட முதியவர் ஒருவருடன் உரையாடிய போது தமது துருப்புக்களின் மூர்க்கத்தனத்தை மேஜர் ஜெனரல் ரொஹான் தலுவத்தவே மறைமுகமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்.

உயர் இராணுவ அதிகாரிக்குத் தெரிந்த உண்மை அரசியல் அதிகாரத் தலைமைப் பீடத்தில் வீற்றிருக்கும் ஜனாதிபதிக்குத் தெரியாமல் போனதா? இல்லவே இல்லை! நன்றாக, முழுமையாகத் தெரியும்.

குறிப்பிட்ட ஓர் இடத்தில் இரு தரப்புகளுக்கும் இடையே சண்டை நடக்கும் போது ஏனைய இடங்கள் மீதும் ஷெல் வீச்சும், விமானக் குண்டு வீச்சும் நடத்தப்படுகின்றன. எனவே இராணுவத் தாக்குதல் என்பது தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதலே.

சண்டைகள் நடைபெறாத நாட்களிலேயே, அமைதியான வேளைகளிலேயே முகாம்களில் இருந்து எந்த நேரம், எந்த இடத்தில் ஷெல்லும், குண்டும் விழும் என்று தெரியாத ஆபத்தான நிலையை படையினர் இங்கு தோற்றுவித்துள்ளனர்.

இவை யாவும் சந்திரிகாவுக்கு மிக நன்றாகத் தெரியும். தெரிந்து கொண்டு தான் போர் மூலம் சமாதானத்தை உருவாக்கப் போவதாகவும், விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்திய பின்னரே அரசியல் தீர்வை முன் வைக்கப் போவதாகவும் சொற்சிலம்பம் ஆடுகிறார்!

அரச பயங்கரவாதம் புரிவதில் வேறு எந்த நாட்டு இராணுவத்தையும் விட, தமது படை மோசமானது என்பதும் சந்திரிகாவுக்குத் தெரியும்! சண்டிலிப்பாயில் சண்டை நடந்தபோது நவாலித் தேவாலயம் மீது குண்டு போட்டு இனப் படுகொலை செய்தவர்கள் அல்லவா ஸ்ரீலங்கா படையினர்?

இனப்படுகொலை மூலம் தமிழர்களை அடக்கி ஆள்வது தான் சந்திரிகாவின் உள்ளார்ந்த நோக்கம். அந்தக் கோர முகத்தை மறைப்பதற்காகவே வினோதமான கேள்விகளும், பொய்ப் பிரசாரங்களும்.

தமிழர்களுக்கு இதுவும் தெரியும்; இன்னும் எத்தனையோவும் புரியும். சந்திரிகாவின் நாடகமும், சாகசமும் கூட விளங்கும்!

## சிக்கன கடன் கூட்டுறவு சங்கங்களுக்கு

அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது, சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்பட்ட பொருள், சொத்து, ஆவணங்கள் தொடர்பான இழப்பு விவரங்களை அந்தந்தப் பகுதி காவல்துறை நிலையங்களில் பதிவு செய்யும்படியும்—

மேற்படி சங்கங்களுக்கு ஏற்பட்ட இழப்பீட்டு விவரங்களை இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன் யாழ். மாவட்ட சி. க. கூ. ச. சமாசத்திற்கு அனுப்பிவைக்கும்படியும்—

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பதில் மாவட்ட செயலாளர் அறிவித்துள்ளார். (இ-எ)

# நவாலி சம்பவம் பற்றி விசாரிக்க சுதந்திரமான ஆணைக்குழு தேவை

## நவசமசமாஜக் கட்சி உறுப்பினர் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 27

''நவாலி தேவாலயம் பாதுகாப்புப் படையினரின் விமானக்குண்டு வீச்சினாலேயே தாக்கப்பட்டுள்ளதால் இச் சம்பவம் குறித்து இராணுவத்தினாலன்றி ஒரு சுதந்திரமான ஆணைக்குழுவினாலேயே விசாரணை செய்யப்பட வேண்டியது கட்டாயமாகும்.

நவசம சமாஜக் கட்சி அரசியல் குழு உறுப்பினரான திரு. வி. திருநாவுக்கரசு இவ்வாறு கோரியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அவரது கடிதத்திலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவர் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இச்சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தால் விடுக்கப்பட்ட அறிக்கையில் நவாலி தேவாலயம், சண்டை நடக்கும் பகுதியில் இருந்து 3 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது; இதனால் இத்தூரத்தையும், திசையையும் கணக்கில் எடுத்தால் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கையால் பாதிக்கப்படக் கூடும் என்பதற்கில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது முற்றிலும் தவறான வாதம் ஆகும்.

கடந்த சில வருடங்களாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தினுள், படையினர் காலடி எடுத்து வைக்காமலே சிவிலியன் இலக்குகள் வகை தொகையின்றி தாக்கப்பட்டன; மக்கள் பல்லாயிரக் கணக்கில் கொல்லப்பட்டனர்.

இது நீங்கள் அறியாத விடயம் அல்ல.

"முன்னோக்கிப் பாய்ச்சல்" இராணுவ நடவடிக்கையினால் இறந்தவர்களுள் 63 பேர் சிறுவர்கள்.

மேலும் 125 சிறுவர்கள் காயமடைந்துள்ளனர்.

எனவே இன்னும் தான் உங்கள், அரசு வண்டிக்கு முன் குதிரையைப் பூட்டாத நிலையில் நடத்திக் கொண்டிருக்கும் இந்தக் கொடூர யுத்தத்தை, நிறுத்துமாறு வேண்டுகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## அம்பாறை பல்கலைக்கழகம் அடுத்த மாதம் இயங்கும்

அம்பாறை மாவட்டத்தில் புதிய பல்கலைக்கழகம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்த யோசனையை அரசாங்கம் கடந்த 19 ஆம் திகதி அங்கீகரித்தது.

தென்கிழக்கு பல்கலைக்கழகம் என்ற பெயரில் ஆரம்பிக்கப் படவிருக்கும் இப்பல்கலைக்கழகம் ஒலுவிலில் அமையும் எனவும்—

ஒலுவிலில் நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கப்படும் வரைக்கும் அடுத்த மாதத்திலிருந்து அட்டாளைச் சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இயங்கும் எனவும் உத்தியோக பூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [எ]

## மட்டக்களப்பில் இம்மாதம் 15 முகாம்கள் மூடப்பட்டன!

யாழ்ப்பாணம், ஜூலை 27

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம் மாதத்தில் மட்டும் 15 பெரிய, சிறிய இராணுவ முகாம்களை படையினர் மூடியுள்ளனர்.

வாகரை மற்றும் மட்டக்களப்பின் மேற்குப் பகுதிகள் யாவும் விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளன.

மட்டக்களப்பு நகர் மற்றும் அதற்கு அண்மையான பகுதிகள் மட்டுமே தற்போது படையினர் வசம் உள்ளதாக ''புலிகளின் குரல்'' வானொலி தெரிவித்தது.

இராணுவத்தினர் தாம் வெளியேறும் பகுதிகளில் பொருளாதாரத் தடையை விதித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## சிற்றூழியரைத் தாக்கிய டாக்டர்கள் இடமாற்றம்

கொழும்பு, ஜூலை 27

பெண் டாக்டர்களிடம் சேஷ்டை விட்ட சிற்றூழியர்களைத் தாக்கிய ஆண் டாக்டர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

மாத்தறையில் உள்ள அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய இரு பெண் டாக்டர்களை அங்கு கடமையாற்றும் சிற்றூழியர்கள் கேலி செய்து சேஷ்டை விட்டதாகவும் —

இதை அவதானித்த ஆண் டாக்டர்கள் இருவர் அந்த சிற்றூழியர்களைத் தாக்கியதாகவும் —

அதையடுத்து சிற்றூழியர்கள் வேலை நிறுத்த முஸ்தீபு செய்ததாகவும் — தெரிய வந்தது.

இது குறித்து விசாரணை செய்த ஆஸ்பத்திரி நிர்வாகம் அந்த இரு ஆண் டாக்டர்களையும் கொழும்புக்கு இடமாற்றம் செய்ததாகவும் தெரிய வந்தது. (ஒ-3)

## விபத்தில் கால் துண்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

இயங்கிக் கொண்டிருந்த நெல் குற்றும் இயந்திரத்தின் ''பெல்ட்''டை மாற்றிய போது தவறுதலாக இடம் பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவரின் இடதுகால் துண்டிக்கப்பட்டது.

சாவகச்சேரி நுணாவிலில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் சின்னத்தம்பி கந்தையா (வயது 67) என்பவரே முழங்காலுக்குக் கீழ் காலை இழந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-15)

# இராணுவ ஆக்கிரமிப்பின் போது மூளாய் ஆஸ்பத்திரி துவம்சம்!

-பாரதிநேசன்-

ஸ்ரீலங்கா ராணுவத்தின் அநியாய அழிப்பைப் பார்ப்பதென்றால் மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரிக்குச் செல்ல வேண்டும்.

அண்மைய ராணுவ நடவடிக்கையின் போது ஒரு வாரத்துக்குமேல் இந்த வைத்தியசாலையில் தங்கியிருந்த ராணுவத்தினர் அங்கு நாசப்படுத்தாத பகுதியோ பொருளோ கிடையாது.

ஐந்து ஏக்கர் பரப்பில் எண்ணற்ற கட்டடங்கள் நிறைந்த மூளாய் ஆஸ்பத்திரியில் ராணுவத்தின் காலடி பட்டு மிதிபடாத இடமே கிடையாது.

யுத்த நடவடிக்கைக்குத் தேவையற்ற முறையில் இந்த ஆஸ்பத்திரியில் சேதங்கள் விளைக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு வைத்திய சாலையை ஏன் இப்படி விஷமத்தனமாகச் சீரழித்தார்கள் என்பதை சாதாரணமாக பார்த்தால் புரிந்து கொள்ள முடியாது.

ஸ்ரீலங்கா ராணுவத்தின் உண்மை உருவத்தைக் கிழித்துக் காட்டும் முறையில் வைத்தியசாலை சீரழிக்கப்பட்டிருக்கிறது.

குழந்தைகளுக்கான தொட்டில்கள் உடைக்கப்பட்டிருக்கின்றன; மருந்து அறையில் மிகவும் அரிதான மருந்துகள் கொட்டப்பட்டு துவம்சம் செய்யப்பட்டுள்ளன; ஊசிப் பெட்டிகள் உடைக்கப்பட்டு பாவிக்க முடியாதவை ஆக்கப்பட்டுள்ளன; மருந்துகளின் உறைகள் கிழிக்கப்பட்டு வீசப்பட்டுள்ளன.

வைத்தியசாலையில் இருந்த மிகவும் மதிப்புள்ள உபகரணங்கள் எல்லாமே தலறாமல் உடைக்கப்பட்டிருக்கின்றன.

சத்திர சிகிச்சைக்குப் பாவிக்கும் போக்கஸ் லைற் (குவி வெளிச்சம்) விறைப்பாக்கமானி, கைபிறிகேற்றர், ஸ்கை லாம்ப் (மேல் விளக்கு), ஸ்ரெறிலைசர், ரணசிகிச்சை மேசை, ஈ. சி. ஜி. இயந்திசக்கர் (உறிஞ்சி) இயந்திரம்.. இத்தியாதி இயந்திரங்கள் தூள்தூளாக உடைக்கப்பட்டிருக்கின்றன.

தவிர, அலுமாரிகள், தளபாடங்கள், மருத்துவ தேவைக்கான துணி மணிகள், படுக்கை மெத்தைகள் நாசமாக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினர் கதவுகள், யன்னல்களைத் தயங்காது உடைத்துள்ளனர். 'கேற்று'களைப் பிடுங்கி எறிந்துள்ளனர். மலசலகூட குழி மூடு பாளைகளை உடைத்து காவலரண் அமைக்கப் பாவித்துள்ளனர்.

வைத்தியசாலையின் அத்தனை அறைகளிலும் உள்ள அலுமாரி, மேசை லாச்சிகளை இராணுவத்தினர் அலசித் [illegible] முதலிய ஆவணங்களை இழுத்தெறிந்துள்ளார்கள். எங்கும் கடதாசி பரவிக்கிடக்கின்றது.

இரும்பு அலுமாரியை அலவாங்கு கொண்டு உடைத்துப் பார்த்திருக்கிறார்கள். தப்பி விட்டது.

அறை ஒன்றின் உயரே சேலை ஒன்று கட்டவிடப்பட்டிருக்கிறது. கீழே வட்டமாக இரத்தம் சிந்தி உறைந்திருக்கிறது.

ஒருவரைக் கட்டித் தூக்கிக் கொன்றார்களா? அல்லது கட்டி அடித்தார்களா? அல்லது ஆட்டைக் கட்டி உரித்தார்களா? இது மர்மமாகவே இருக்கிறது.

இப்பொழுது எமது வைத்தியசாலை கணிப்பிட முடியாத இழப்பைக் கண்டுள்ளது. எமக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் 5முதல் 10கோடி ரூபா வரையாகும் என பூர்வாங்க மதிப்பீடு காட்டுகிறது.—

இவ்வாறு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் தலைவர் திரு. எஸ். குலசூரியனும் செயலாளர் திரு. கே. செல்வராசாவும் கூறினார்கள்.

''இது ஒரு திட்டமிட்ட அழிப்பு நடவடிக்கை ஆகும் இதனால் மக்களுக்குப் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது''

வலி மேற்கு சங்கானை பிரதேச செயலாளர் திரு. கா. சந்திரராசா 20ஆம் திகதி பிற்பகல் மூளாய் ஆஸ்பத்திரியைச் சென்று பார்வையிட்டபோது இவ்வாறு கூறினார்.

★

## உணவு முத்திரைகளை பெற்றுக்கொள்க

வலிகாமம் தெற்கு ஜூலை 27

சங்குவேலி கிராம சேவையாளர் பிரிவில், முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கை ஆரம்பமாவதற்கு முன்னரே தெல்லிப்பழை, சங்கானை, சண்டிலிப்பாய் போன்ற இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து வாழும் மக்களுக்கான உணவு முத்திரைகள் பல வழங்கப்படாமல் உள்ளன.

இவற்றைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் தமது உணவு முத்திரைகளை அலுவலக நாட்களில் உடுவில் வடக்கு கிராம சேவையாளர் [இலக்கம் 185, 186] அலுவலகங்களில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு சங்குவேலி கிராம சேவையாளர் அறிவித்துள்ளார்.

(எ-152)

## அரசின் பொய் பிரசாரம்

கொழும்பு, ஜூலை 27

ஸ்ரீலங்காவுக்கான உல்லாசப் பயணிகளின் வருகை கடந்த ஆண்டுகளை விட மிகக் குறைவாகவுள்ளது எனினும் உல்லாசப் பயணிகள் வருகை அதிகமாகவுள்ளது என ஸ்ரீலங்கா அரசு பொய் பிரசாரம் செய்வதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவிக்கின்றது. (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போன்ற
# ...ளைத் திருடும் குழுவே ...ஞரை கொன்று வீசுகிறது

...லை 27 ...பான்ற ...வங்களை ...றிறு வேறு ...று அறுவை சிகி... வழங்குவதற்காகவே இளைஞர்கள் கொழும்பிலும் அதன் சுற்றாடல் பகுதியிலும் இனந்தெரியாத குழுக்களால் கடத்தப்படுகின்றனர் என்ற அதிர்ச்சி தரும் தகவல் தற்போது கொழும்பில் வெளியாகியிருக்கிறது.

இவ்வாறு உடல் அவயவங்களுக்காகக் கடத்தப்பட்ட தமிழ் இளைஞர்களே அந்த அவயவங்கள் அகற்றப்பட்ட பின்னர், கொலை செய்யப்பட்டு, பொல்கொட மற்றும் அவ்வை வாவிகளில் சடங்களாக வீசப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

இவ்வாறு கடத்தப்பட்ட தமிழ் இளைஞன் ஒருவன், கடத்தல் குழுவிடம் இருந்து தப்பி வந்ததை அடுத்தே இந்த அதிர்ச்சி தரும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் தனியாக நடமாடும் தமிழர்களே, படையினர் போன்ற போர்வையில் வரும் இனந்தெரியாத குழுக்களினால் கடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் நடமாடும் தமிழ் இளைஞர்கள் மீது தமக்கு சந்தேகம் ஏற்பட்டால், கடத்தப்படுவது போன்ற பாணியில் அவர்களைப் படையினர் கைது செய்து கொண்டு சென்று — அது பற்றிய தகவல்களை வெளியே விடாமல் — அவர்களைத் தடுத்து வைத்திருப்பதையும் —

அவ்வாறு கடத்தப்பட்ட — அல்லது கைது செய்யப்பட்ட தமிழர்கள் குறித்து செய்யப்படும்முறைப்பாடுகளை பொலீஸார் கவனத்தில் எடுக்காது — சிரத்தை காட்டாமல் விடுவதையும் —

மேற்படி உடல் அவயவங்களைத் திருடும் கோஷ்டி தனக்குச் சாதகமாகப்பயன்படுத்திக் கொள்வதாகக் கூறப்படுகின்றது.

இந்தத் திருட்டுக் குழுவில் உயர்வட்டாரங்களும் நேரடியாக சம்பந்தப்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படுகின்றது.

தானமாக வழங்கப்படும் ஒரு சிறுநீரகத்துக்கு கொழும்பில் 3 லட்சம் ரூபா வரை வழங்கப்படுகின்றதாம். அதன்படி ஒருவரைக் கடத்தி அவரை மயக்கி அவரது இரண்டு சிறுநீரகங்களை மட்டும் அகற்றி தேவையானவருக்கு வழங்குவதன் மூலம் ஆறு லட்சம் ரூபா வரை சம்பாதிக்க முடியும் என்றும் —

அவரின் ஏனைய உறுப்புகளையும் விற்றால் மேலும் பல லட்சங்களைச் சம்பாதிக்காலம் என்றும் —

கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

[உ]

## புத்தளத்தில் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்

புத்தளம் இலவன்குளம் சோதனைச் சாவடி மீதான தாக்குதலில் ஏ.கே.எல்.எம்.ஜி ஒன்று உட்பட 5 துப்பாக்கிகளையும் ஏனைய இராணுவத் தளபாடங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

இத் தாக்குதலில் 6 இராணுவத்தினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர் என்பதும் 7 பேர் காயமடைந்தனர் என்பதும் தெரிந்ததே.

இத்தாக்குதலில் ஏ.கே. எல்.எம்.ஜி. துப்பாக்கி — 1, ஏ.கே. ரகத் துப்பாக்கிகள் — 4, நம் ரவைக்கூடுகள் — 9, தொடர் ரவைகள் — 730, ஏ.கே. ரவைக்கூடுகள் — 10, நடுத்தர ரவைகள் — 426, கைக்குண்டுகள் — 4 என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இந்த வெற்றிகரத் தாக்குதலில் லெப். மைந்தன் சுரேன் (சதாசிவம் ஜஸ்மின் — மன்னார்) என்ற போராளி வீரச்சாவடைந்தார். (ஒ-4)

## மரண அறிவித்தல்கள்

### சீனிவாசகம் பரமானந்தன்
(Retd. Supdt of Excise)

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த சீ. பரமானந்தன் (ஓய்வுபெற்ற கலால் பகுதி அத்தியட்சகர்) 21 - 7 - 95 அன்று கனடாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சீனிவாசகம் தம்பதிகளின் புத்திரனும், காலஞ்சென்ற பூலோகரத்தினத்தின் அன்புக் கணவரும், ஷீலா (கொழும்பு), பாலகுமார் (கனடா), ஷாந்தி (கனடா], உமையாளன் (கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், நிகாக் டி சொய்சா [கொழும்பு), கிருஷ்ணவேணி [கனடா], யோகேஸ்வரன் [கனடா], ஆகியோரின் அன்பு மாமனும், ஷாணிகா, ரஷிகா, ஷாலினி, பிருந்தாபன் ஆகியோரின் அன்புப் பேரனும், பரமேஸ்வரன், காலஞ்சென்ற சிவகாமசுந்தரி, மற்றும் சரவணபவான், இரத்தினசிகாமணி, வேலும்மயிலும், காந்திமதி [சண்முகசுந்தரம், காலஞ்சென்ற புவனேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் 29 - 07 - 1995 Saskatoon, Canada இல் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்;
சி. சரவணபவான்
[சகோதரன்]

"மிதிலை"
உரும்பிராய் வடக்கு.
[87752]

### ஆறுமுகம் இராமச்சந்திரன்
[நீர்ப்பாசனத் திணைக்களம் நாவற்குழி]

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வேலணை கிழக்கு 2ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்டிருந்தவருமான ஆறுமுகம் இராமச்சந்திரன் நேற்றுக் காலமானார்.

இவர் புஸ்பராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பு மற்றும் முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், மகேஸ்வரி [லண்டன்), இராசநாயகம், செல்வநாயகம், சதானந்த லெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருச்செல்வம் (கொழும்பு), பத்மாவதி, தையல்நாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தர்மகுணசிங்கம், திலகவதி, யோகராணி, உதயராணி [இந்தியா), நித்தியகல்யாணி, நவசோதி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு அத்தானும், வீரசிங்கம், செல்வராஜா (இந்தியா], சொக்கலிங்கம் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-7-95) இணுவில் வீதி, மானிப்பாய் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக நண்பகல் 12 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தர்மகுணசிங்கம் -
மைத்துனர்

இணுவில் வீதி,
மானிப்பாய்.
(37754)

### ஜி.சீ.ஈ உயர்தர..
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அனுமதி அட்டைகளும் பாடநேர அட்டவணைகளும் 2 வாரங்களுக்கு முன்னதாகவே சகல பரீட்சார்த்திகளுக்கும் அனுப்பப்பட்டு விட்டன.

யாழ்.மாணவர்களுக்கு அவர்களது அனுமதி அட்டைகள் இன்று வழங்கப்படும். இது பற்றி கல்வித் திணைக்கள அதிகாரிகள் மூலம் ஏற்கனவே பணிப்புரைகள் விடுக்கப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் தமது அடையாளத்தைக் காட்டக் கூடிய வகையில் தேசிய அடையாள அட்டை, தபால் திணைக்களத்தின் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு போன்றவற்றை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு செல்லல் வேண்டும்.

தேசிய அடையாள அட்டை தவிர்ந்த ஏனைய அடையாளம் காட்டவல்ல தஸ்தாவேஜுக்களின் போட்டோப் பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டுமென்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

மேலே குறிப்பிடப்பட்டவற்றைத் தவிர வேறு அடையாள அட்டைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட ...ட்டாது. [ஒ-க-4]

## ...கைதான அமெரிக்க பிரஜை நாடு கடத்தப்படுவார்

கொழும்பு, ஜுலை 27
தாண்டிக்குளத்தில் கைது செய்யப்பட்டு, கொழும்பில் பொலீஸ் காவலில் வைக்கப்பட்டுள்ள அமெரிக்க பிரஜையான கெனத் மல்டோன் என்பவரை நாடு கடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன.

இந்த அமெரிக்க பிரஜை புலிகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கொழும்பு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு, அவரை 2 வார தடுப்புக் காவலில் வைக்க உத்தரவிடப்பட்டிருந்தது தெரிந்ததே.

பொலீஸ் காவலில் இருந்த பிரஸ்தாப அமெரிக்க இளைஞர் நேற்று குடியகல்வு, குடிவரவுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட இருந்தார்.

அவரை கூடிய விரைவில் அமெரிக்காவுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று குடியகல்வு, குடிவரவுத் திணைக்கள கட்டுப்பாட்டாளர் திரு. ஆரியசேன தெரிவித்தார்.

இதேவேளை கெனத் மல்டோனின் வழக்கு விசாரணைக்கு 'இன்ரபோல்' பொலீஸாரின் உதவியை நாட விரும்புவதாக அரசு அறிவித்துள்ளது என்று மற்றொரு செய்தி தெரிவிக்கிறது. (ஒ-4)

## 'மாஹோ' கப்பலில் வந்த
# 50 தொன் சவர்க்காரம் இறக்குவதற்கு அரசு தடை!

'மாஹோ' கப்பலில் பருத்தித்துறைக்கு எடுத்து வரப்பட்ட நூறு மெற்றிக் தொன் சவர்க்காரத்தில் 50 மெற்றிக் தொன்னுக்கு மேல் இறக்குவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதனால் 'மாஹோ' கப்பல் பொருள்களை இறக்கி முடித்துவிட்டு இன்று 50 மெற்றிக்தொன் சவர்க்காரத்துடன் மீண்டும் கொழும்புக்குப் புறப்பட்டுச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பனநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனியாருக்கென எடுத்துவரப்பட்ட இச் சவர்க்காரம் முழுவதையும் இறக்குவதற்கான முயற்சிகளை யாழ். அரச அதிபர் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு எடுத்திருந்த போதிலும் அவை பலனளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

### வீரச்சாவு

கடந்த ஞாயிறன்று மட்டக்களப்பில் தவறுதலாக இடம்பெற்ற வெடிவிபத்தில் 2 ஆம் லெப்டினன்ட் அச்சரன் அல்லது சிவச்சந்திரன் [தியாகராஜா சுபாஸ்கரன் — மட்டக்களப்பு] என்ற போராளி வீரச்சாவடைந்தார். (ஒ-4)

## சத்திர சிகிச்சை நிபுணர் உரை

யாழ் றோட்டறிக் கழகத்தின் அதிதிப்பேச்சாளர் தினக் கூட்டம் இன்று மாலை 5 மணிக்கு ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெறுகிறது.

யாழ். போதனா வைத்திய சாலையின் சத்திர சிகிச்சை நிபுணர் எம். கணேசரத்தினம் அதிதிப்பேச்சாளராகக்கலந்து கொண்டு —

"உதவி தேவைப்படும் இவ்வேளையில் நாமும் எமது சமூகமும்" என்னும் பொருளில் உரையாற்றுவார்.

### இலங்கையை...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளிக்கு கருத்து வெளியிட்ட ஏ. எவ் பி செய்தியாளர் அமால் ஜெயசிங்கா கூறியதாவது:-

உத்தேச தீர்வு யோசனை ஆச்சரியப்படக் கூடியதாக அமைந்ததாகக் கூறமுடியாது. இத்தகைய ஒரு யோசனையையே அரசு சமர்ப்பிக்கும் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே.

இந்த யோசனைக்கு தீவிரவாதப் போக்குடைய சிங்களவர் தரப்பிலிருந்தும் தீவிரப் போக்குடைய தமிழர் தரப்பிலிருந்தும் எதிர்ப்புக் கிளம்பலாம்.

அதனால் இலங்கை அரசியல் இரு துருவப்படும் வாய்ப்பு உண்டு.

எனினும் அரசாங்கத்துடன் எதிர்க்கட்சி ஒத்துழைத்தால் மட்டுமே மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் உத்தேச அரசமைப்பு மாற்றத்தை நிறைவேற்ற முடியும்.

எனவே இத்தீர்வு யோசனை இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருமா என்பதனை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இத்திட்டத்தை நிறைவேற்ற நீண்டகாலம் செல்லும் என்பதும் இன்னொரு விடயமாகும்.

முதலில் இது மூன்றில் இரண்டு வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். பின்னர் சர்வஜன வாக்கெடுப்பில் மக்களால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இவற்றைச் செய்து முடிக்கும் போது உத்தேச தீர்வு அப்போதைக்கும்பொருத்தமானதாக இருக்குமா என்பதும் சிந்திக்கப்பட வேண்டியதாகும்.

இந்தத் திட்டம், நடைமுறையில், யதார்த்தத்தில் எந்தளவுக்கு தமிழர்களின்தேவைகளைச் கணிசமாகவும், நியாயமாகவும் பூர்த்தி செய்கிறது என்பதனைப் பொறுத்தே இதன் வெற்றி தங்கியிருக்கும் — என்றார். [அ]

### காங்கேசன்....
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பொருள்களை செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவினரின் அனுமதி பெறாமல் பலவந்தமாக இறக்கியதும் —

அதனால் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அரசுடன் கருத்து முரண்படும் நிலை ஏற்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இதனை அடுத்தே காங்கேசன்துறை துறைமுகத்துக்கு பொருள்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்கு தமது பாதுகாப்பை வழங்க முடியாது என செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அரசுக்கு அறிவித்திருக்கிறது.

இதற்கிடையில் —

'லங்கா முதீத' கப்பலில் அனுப்பி வைக்கப்பட்ட உணவுப் பொருள்களில் 30 சதவீதம் காங்கேசன்துறையில் இறக்கப்பட்டுள்ளதாக இலங்கை வானொலி நேற்று மாலை தெரிவித்தது

இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதி மக்களுக்கு இப்பொருள்கள் விநியோகிக்கப்படும் என்றும் —

மிகுதி 70 சதவீத உணவுப் பொருள்கள் யாழ்ப்பாண மக்களுக்கென பருத்தித்துறை துறைமுகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் உணவுப் பொருள்களுக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லை என்று யாழ். அரசாங்க அதிபர் கொழும்பு அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளதாகவும் இலங்கை வானொலி தெரிவித்தது. (உ-க-6)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 27 - 07 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org